VLAMBARAM 01 DEC 2009

# அந்த முடிச்சுக்களை அவிழ்த்திடுங்கள்

## ஒரு பூவைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் எண்ணினால் அதை நீங்கள் இதழ் இதழ்களாக பிய்த்துப் பார்க்கக் கூடும். அப்படிச் செய்தால் உங்களுக்கு ஒன்றுமே தெரியாது.



சத்குரு வாசுதேவ்

பலருக்கும் தங்கள் வாழ்க்கையை சரியாகவே கையாளத் தெரியவில்லை. இந்த உலகில் பார்த்திருக்கிறீர்களா? இறந்த பிறகும் கூட வாழ நினைக்கிறார்கள். இது எதற்காக?

உங்கள் அனுபவத்தில் இல்லாத எதையும் நீங்கள் புரிந்து கொள்ளவோ, ஆராய்ச்சி செய்யவோ முடியாது. இதில் ஒவ்வொரு தனிமனிதனும் மிகுந்த தெளிவோடு இருக்க வேண்டும். மரணத்திற்குப் பிறகான வாழ்க்கையை மனிதர்கள் புரிந்து கொள்ள முயலுகிறார்கள். நீங்கள் இருப்பதைவிட வேறு பரிமாணத்தில் இருக்கிற எதையும் உங்களால் புரிந்து கொள்ளவே முடியாது. நான் எடுக்கிற எல்லா முயற்சியுமே எல்லாப் பரிமாணத்திற்கும் உங்களை அழைத்துச் செல்லத்தான். இது நிகழ வேண்டுமென்றால் புரிந்து கொள்ள முயல்வதை முதலில் நீங்கள் நிறுத்த வேண்டும். அதை புரிந்து கொள்ள முடியாது என்பதும், புரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய அம்சங்கள். அனுபவம்தான் உங்களை இந்தப் பரிமாணத்திலிருந்து விடுவித்து அழைத்துச் செல்கிறது.

ஒரு பூவைப் புரிந்து கொள்ள நினைத்தால் எப்படி புரிந்து கொள்ள முடியும்? அந்த முயற்சியில் ஒவ்வொரு இதழ்களாகப் பிய்த்துப் போடுவீர்கள். ஆனால் அப்படி செய்வதால் உங்களுக்கு ஒன்றும் புரியாது. அதனுடைய வேதியியல் ஒருவேளை உங்களுக்குப் புரியலாம். அதனை நீங்கள் ஆராய்ச்சி செய்து எல்லாமே புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் என்று கண்டுபிடிக்கலாம். ஆனால் அந்தப் பூவைப் பற்றி ஒன்றும் உங்களுக்கு தெரியாது.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www.ishafoundation.org
www.ishayoga.org

இப்போது பலரும் ஆன்மீகத்தை ஒரு புரிதலாக உங்களுக்குக் கொடுக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எப்படி கட்டப்பட்டு இருக்கிறீர்கள் என்ற புரிதல்கள் தான் வேண்டும். இதை இன்னொரு பரிமாணத்தில் நீங்கள் புரிந்து கொள்ள முடியாது. கடவுள் எப்படி இருப்பார்? சொர்க்கம் எப்படி இருக்கும்? என்றே மனிதர்கள் பேசிக் கொள்கிறார்கள். இது உங்களை வீண் கற்பனைகளுக்குக் கொண்டு செல்லுமே தவிர வேறு எங்கும் அழைத்துச் செல்லாது. நீங்கள் உங்கள் எல்லைகளுக்குள் உட்பட்டு இருக்கிறீர்கள் என்ற ஒன்றைத்தான் நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். புரிந்து கொண்டு அந்த பிணைப்பிலிருந்து உங்களை விடுவித்துக் கொண்டால் நீங்கள் எங்கே போகவேண்டுமோ அங்கே போவீர்கள்.

நான் ஆகாயத்தை பற்றிப் பேசுவதால் எந்தப் பயனுமில்லை. எந்தக் கயிறுகள் உங்களை தரையோடு பிணைத்திருக்கின்றன என்றுதான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உங்களைக் கீழே கட்டிவைத்திருக்கிற கயிறுகளில் தான் நீங்கள் உங்கள் வேலையைக் காட்ட வேண்டுமே தவிர ஆகாயத்திடம் அல்ல. அந்தப் பிணைப்புகளை நீங்கள் அவிழ்த்துவிட்டால் ஆகாயத்தைச் சென்றடைவீர்கள். அங்கு சென்றடைந்த பிறகு தான் ஆகாயம் என்றால் என்ன என்பது தெரியும். இல்லாவிட்டால் நீங்கள் என்னதான் சிந்தித்தாலும், என்னதான் புரிந்து கொண்டாலும், என்னதான் ஆராய்ச்சி செய்தாலும் அவை எல்லாமே இப்போது எங்கே இருக்கிறீர்களோ அந்த குறுகிய எல்லைகளிலிருந்து வருபவைதான்.

எனவே, தற்போதைய அனுபவத்தைத் தாண்டி உங்களால் புரிந்து கொள்ள முடியாது. ஒரு குருவினுடய வேலை என்பது உங்களை பிணைத்திருக்கிற பிணைப்புகள் என்ன என்பதைக் காட்டி, எந்த எந்த முடிச்சுக்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டுவது தான். அந்த முடிச்சுக்களை அகற்றிவிட்டால் நீங்கள் புறப்படுவதற்கு தயாராக இருக்கிறீர்கள். இன்னும் ஒரே ஒரு முடிச்சு இருக்கக்கூடும். அதை அவிழ்த்தால் அவர் உங்களைத் தள்ளிவிட முடியும். பத்து கயிறுகள் கட்டப்பட்டிருக்கும் நிலையில் அவர் தள்ளினால் அது உங்களுக்குத்தான் சேதத்தை ஏற்படுத்தும். எனவே, எல்லாம் உடைபட்ட பிறகு ஒரே ஒரு நூலில் மட்டும் தொங்கிக் கொண்டிருக்கும் நிலையில் உங்களை அவரால் தள்ளி விட முடியும். அப்போது நீங்கள் உடைந்து போக மாட்டீர்கள். அந்த நூல் தான் அறுந்துபோகும். யோகாவின் துணை கொண்டு நீங்கள் உடலை முதிர்ச்சி கொள்ளச் செய்ய முடியும். மன முதிர்ச்சிக்கு வழி செய்ய முடியும். உங்கள் சக்திநிலைகளை முதிர்ச்சிநிலைக்குக் கொண்டு செல்ல முடியும். அப்படி செய்கிறபோது உங்களைப் பிணத்திருக்கிற பிணைப்புகளும் இந்த கயிறுகளும் மெல்ல மெல்ல அறுந்து விடும். ஒரு தள்ளுதல் தேவைப்படுகிற விநாடி வரும். அப்போ நீங்கள் கடந்து போவீர்கள்.